**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 07–ம் நாளன்று 29 வது பிரதிவாதி சாட்சியாக பி.வா.சா.28 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: தியாகராஜன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது:** | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 29 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 29 வது பிரதிவாதி தியாகராஜன் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.153 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.154 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய விஜயலட்சுமி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6292/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.155 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(புகைப்பட நகலாக இருப்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 07.11.2025 ஆம் தேதிய ரவிசந்திரன் பெயரிலான வில்லங்க சான்று ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.156 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ்**

**முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 07.11.2025 ஆம் தேதிய விஜயலட்சுமி பெயரிலான வில்லங்க சான்று ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.157.ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 07.11.2025 ஆம் தேதிய விஜயலட்சுமி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.158 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.05.2018 ஆம் தேதிய DTCP Registration No.DTCP/P/0242715/2017 விண்ணப்பம் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.159 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(புகைப்பட நகலாக இருப்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)** வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது திருச்செங்கோட்டில் வசித்து வருகிறேன். திருச்செங்கோட்டிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 45 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் போடவில்லை. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.155 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.155–ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல ராமகிருஷ்ணா மிசினில் சொன்னதன் அடிப்படையில் தாவாச்சொத்தின் ஒரு பகுதியை கிரையம் வாங்கினேன். வழக்கிற்கு முன்பு வில்லங்கம் பார்த்ததாக சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் பி.வா.சா.ஆ.156–யை கிரையம் வாங்கும் போது பார்க்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பார்த்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் நானே தான் சாட்சியம் அளிக்க வந்தேன். நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.155 கிரையம் செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.158 கூட்டுப்பட்டா

**செல்லாது என்று சொன்னால் சரியல்ல. ரவிச்சந்திரனுக்கு தாவா சொத்தை விற்க எந்தவொரு உரிமையோ அதிகாரமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.159 ல் சொல்லப்பட்டுள்ள பதிவு தேதியும், பணம் செலுத்திய தேதியும் வேறு வேறு தேதியாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.159 ஆவணம் உங்களால் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.